## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா எம்.எஸ். அப்துல் மஜீத்

**ஜூலை 24 (2016)**



ஒன்றிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த புதுக்கோட்டை நகர துணைச் செயலாளர், தொடர்ந்து 17 ஆண்டுகள் நகரச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், புதுக்கோட்டை மாவட்ட அவைத்தலைவர், மாவட்ட பொறுப்புக்குழு செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகம் வளர பாடுபட்டவர்.

அறந்தாங்கி மாநாட்டு செயலாளராகவும், சேலம் சிறப்பு மாநிலச் செயலாளராகவும், புதுக்கோட்டை மாவட்டக் கழக கட்டிடக்குழு செயலாளராகவும் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை நகர வங்கி தலைவராகவும், புதுக்கோட்டை நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த கருப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு ஆறு மாதங்களும் – நெருக்கடிகால மிசா சட்டத்தில் 15 மாதங்களும் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

சென்னையில் மேயர் இராதாகிருஷ்ணன்

## ஹாக்கி ஸ்டேடியம் புனரமைப்பு - மேம்பாட்டுப் பணிகள்!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆய்வு!

சென்னை, ஜூலை 24-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்றுமுன்தினம்(22.07.2023) சென்னை மேயர் இராதாகிருஷ்ணன்ஹாக்கிஸ்டேடியத்தில்நடைபெற்றுவரும்புனரமைப்புமற்றும்மேம்பாட்டுப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை மேயர் இராதா கிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் வருகிற ஆகஸ்ட் 03 முதல் ஆகஸ்ட் 13 வரை 7ஆவதுஆசியஆடவர்ஹாக்கி சாம்பியன்ஷிப்-2023 போட்டிகள் நடைபெற உள்ளது. இந்த போட்டியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான், மலேசியா, ஜப்பான், மற்றும் கொரியாஆகிய6நாடுகள்பங்கேற்கின்றன. சர்வதேச அளவிலான இப்போட்டியினை சிறப்பாகநடத்துகின்றவகையில் மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் புரனமைப்பு மற்றும்மேம்பாட்டுபணிகள் ரூபாய்16கோடிமதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

பாரீஸ் ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை ஆடுதளம், வீரர்கள் பயற்சி செய்வதற்கான செயற்கை ஆடுதளம் மற்றும் இணைப்பு பணிகள், பார்வையாளர்களுக்கான இருக்கை வசதிகள், சிறப்பு விருந்தனர்கள் அமருவதற்கான பார்வையாளர் கூடம், விளையாட்டு வீரர்களுக்கான அறைகள், மின்னொளிவசதிகள், நவீனகழிப்பிட வசதிகள் மற்றும் பிற சீரமைப்பு பணிகள் முழுவீச்சில்நடைபெற்றுவருகிறது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.07.2023) மேயர் ராதா கிருஷ்ணன் ஸ்டேடியத்தில்நடைபெற்று வருகின்ற பணிகளை அதிகாரிகளுடன்நேரில்சென்றுபார்வையிட்டு ஆய்வு செய்தார். நடைபெற்று வருகின்ற அணைத்து பணிகளையும் இரண்டு நாட்களுக்குள் முடிக்க உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

வருவாய் பேரிடர் மேலாண்மைத் துறையில்

## 110 வட்டாட்சியர்கள் துணை ஆட்சியர்களாக பதவி உயர்வு!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை, 24-

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் 110 வட்டாட்சியர்கள் துணை ஆட்சியர்களாக பதவி உயர்வு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்த அரசின் செய்திக்குறிப்பு வருமாறு:-

மாண்பமை உச்சநீதிமன்றம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பதவி உயர்வு அளிக்கும் போது பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டினை பின்பற்றி பதவி உயர்வு அளிக்கும்படி தீர்ப்புரை வழங்கியது. மாண்பமை உச்சநீதிமன்ற வழங்கிய ஆணையின்படி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் 2004ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல்களில் பணிமூப்பில் உரிய திருத்தங்கள் செய்து அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசு ஆணைகளின் படி, தற்போது வட்டாட்சியர்களாகப் பணிபுரியும் 110 நபர்களுக்கு துணை ஆட்சி யர்களாக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2022ஆம் அண்டு வரையிலான துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல்களுக்கான ஆணைகள் விரைவில் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---



## தி.மு.க. இளைஞர் அணி

**ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் நீட்டிப்பு**

**இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

மாவட்ட – மாநில – மாநகர – அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் நிர்வாகிகளை நியமிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. ஏற்கெனவே இப்பொறுப்புகளுக்கு வர விரும்பும் இளைஞர்கள் 30.06.2023–க்குள் விண்ணப்பிக்குமாறு அறிவித்திருந்தோம். இந்நிலையில், இந்த கால அவகாசத்தை நீட்டிக்குமாறு பல்வேறு தரப்புகளில் இருந்து கோரிக்கைகள் வந்ததைத் தொடர்ந்து விண்ணப்பங்கள் அளிப்பதற்கான கால அவகாசம் 31.07.2023 வரை நீட்டிக்கப்படுகிறது.

விண்ணப்பங்களை மாவட்டக் கழகத்திலோ, மாவட்ட அமைப்பாளரிடமோ, அன்பகத்திலோ வழங்கலாம். அளிக்கப்படும் விண்ணப்பங்களை முறையான படிவத்தில் பூர்த்தி செய்து அந்த படிவத்துடன் விண்ணப்பங்களையும் இணைத்து அன்பகத்துக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மாவட்ட வாரியாக நேர்காணல் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.



**தி.மு.க. இளைஞர் அணி**

அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள்

சுயவிவரப் படிவம்

கழக மாவட்டம் : ..............................

சட்டமன்றத் தொகுதி : ..............................

ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் : ..............................

மாநிலம், தொகுதி (புதுச்சேரி–காரைக்கால் மட்டும்) : ..............................

பொறுப்பு : ☐ அமைப்பாளர் ☐ துணை அமைப்பாளர்

பெயர் : ..............................

தந்தை பெயர் : ..............................

பிறந்த தேதி : .................... வயது....................

கல்வித் தகுதி : ..............................

தொழில் : ..............................

முகவரி : ..............................

..............................

வாட்ஸ்–அப் எண் : ..............................

மின்னஞ்சல் : ..............................

இளைஞர் அணியில் உறுப்பினராகச் சேர்ந்த ஆண்டு : ....................

இப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள எனது விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதியளிக்கின்றேன்.

நாள் : (கையொப்பம்)

குறிப்பு : 1) படிவத்தில் விவரங்களைத் தெளிவாகப் படிக்கும் விதமாக பூர்த்தி செய்ய வேண்டும்.
2) புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை / ஆதார், கல்விச் சான்றிதழ் கண்டிப்பாக இணைக்க வேண்டும்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 22–07–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

---

நீதிமன்றங்களில்

## காந்தி - திருவள்ளுவர் படங்கள் மட்டுமே இருக்க வேண்டும்!

### உயர்நீதிமன்றப் பதிவாளர் உத்தரவு!

சென்னை, ஜூலை 24-

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள நீதிமன்றகளில் மகாத்மாகாந்தி மற்றும் திருவள்ளுவர் உருவப் படங்களை தவிர வேறு எந்த படங்களும் வைக்கக் கூடாது என அனைத்து நீதிமன்றங்களுக்கும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயர்நீதிமன்ற அனைத்து நீதிபதிகள் அடங்கிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து அனைத்து மாவட்ட நீதிமன்றங்களுக்கும் உயர்நீதிமன்ற தலைமை பதிவாளர் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், நீதிமன்றங்களில் மகாத்மா காந்தி, திருவள்ளுவர் ஆகிய இருவரின் திருவுருவப் படங்களை மட்டுமே வைக்க வேண்டும் என்றும், அதேநேரத்தில் மற்ற யாருடைய திருவுருவப் படத்தையும் நீதிமன்றங்களில் வைக்கக் கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் இந்த தீர்மானங்களை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்றும், மீறுவோர் மீது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் தகுந்த புகார் அளித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, நீதிமன்றங்களில் அம்பேத்கரின் திருவுருவப் படத்தை அகற்ற வேண்டும் என்ற சென்னை உயர்நீதிமன்ற பதிவாளரின் உத்தரவுக்கு சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சியினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் எஸ்.சி., துறை மாநிலத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், உயர்நீதிமன்ற பதிவாளர் தனது சுற்றறிக்கையை உடனடியாக திரும்பபெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். அரசமைப்பு சட்டத்தை தயாரித்து அளித்த அம்பேத்கரின் உருவப் படத்தை நீதிமன்றங்களில் வைக்கக்கூடாது என்று கூறுவதை எவராலும் ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளார். சட்டமேதை அம்பேத்கரின் படத்தை நீதிமன்றங்களில் வைப்பது தான் நீதிமன்றங்களுக்கு பெருமை சேர்க்கும் செயலாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதே கருத்தை வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவனும் அம்பேத்கரின் படத்தை அகற்றும் செயலுக்கு தமது கண்டனத் தைத் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நாகை கே.வி. இராமன்

**ஜூலை 24 (2009)**



கழகம் துவங்கிய காலத்தில் நாகப்பட்டினம் நகரக் கழகத்தின் முதல் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தொடர்ந்து இருபது ஆண்டுகள் நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகை மாவட்டம் முழுவதும் ஏராளமான கிளைக் கழகங்கள் ஏற்படுத்தியதுடன், தமிழகத்திலேயே அதிக படிப்பகங்கள் துவக்கி, பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டையும், தலைவர் கலைஞர் அவர்களின் அன்பையும் பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறைக்குச் சென்றவர்.

பிராமணர் சமூகத்தைச் சேர்ந்த இவர் 1964ஆம் ஆண்டிலேயே தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## குஜராத்தில் கடும் வெள்ளப் பெருக்கு!

அகமதாபாத், ஜூலை 24-

நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால் வட மாநிலங்களில் கனமழை கொட்டி தீர்த்தது. இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், அரியானா, பஞ்சாப், அசாம், டெல்லி ஆகிய மாநிலங்களில் பெய்த பலத்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இதேபோல மராட்டிய மாநிலத்திலும் கடந்த சில தினங்களாக பல இடங்களில் பலத்த மழை பெய்தது. இந்நிலையில் குஜராத் மாநிலத்தில் பெய்து வரும் கனமழையால் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி உள்ளது. சாலை முழுவதும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஜூனாகத் மாவட்டத்தில் பலத்த மழையால் கால்நடைகள், வாகனங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன